செயலாளர், ஈரோடு விற்பனைக்குழு, ஈரோடு அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு.இல.குழந்தைவேலு, பி.எஸ்ஸி., (விவ).,

அ1/1397/2017 நாள் : 26.04.2018

பொருள் : பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV சிறப்பு போட்டித் தேர்வுகள் (2007) மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டமை - ஈரோடு விற்பனைக்குழு - திரு.வே.பழனியப்பன், இளநிலை உதவியாளர் - பணி நியமனம் பெற்றது - பணியினை வரண்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை : 1.செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்: 304/PSD-D1/2015, நாள்: 06.02.2017.
2.செயலாளர், ஈரோடு விற்பனைக்குழு, ஈரோடு அவர்களின் செயல்முறை ஆணை எண்: அ1/01397/2017, நாள்: 13.02.2017.
3.அரசாணை நிலை எண்: 43 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்: 15.02.1994.
4.அரசாணை நிலை எண்: 978 வேளாண்மைத்துறை நாள்:23.05.1985.

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV சிறப்புத் தேர்வுகள் வாயிலாக ஈரோடு விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு பார்வை (1)இன் படி ஒதுக்கீடு பெற்று பார்வை (2)இல் காணும் செயல்முறை ஆணைகளின்படி பணி நியமனம் வழங்கப்பட்டதன் தொடர்ச்சியாக, திரு.வே.பழனியப்பன் அவர்கள் 17.02.2017 முற்பகல் முதல் தலைமை அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிசேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

மேற்படி பணியாளர் இளநிலைஉதவியாளர் பதவியில் ஓராண்டு பூர்த்தி செய்யும் முன்னர் பின்வருமாறு விடுப்பு துய்த்துள்ளார்.

| விடுப்பின் தன்மை | நாள் | | விடுப்பு நாட்கள் |
|---|---|---|---|
| | முதல் | முடிய | |
| ஊதியமில்லா விடுப்பு மருத்துவச் சான்றுடன் | 11.01.2018 | 01.02.2018 | 21 நாட்கள் |

எனவே இவருக்கு இளநிலைஉதவியாளர் பதவியில் இயல்பாக பணிவரண்முறை செய்யப்பட வேண்டிய நாளான 17.02.2017 முற்பகலில் இருந்து 21 நாட்கள் நீட்டிப்பு செய்து 10.03.2017 முற்பகல் முதல் பணிவரண்முறை செய்தும், தொடர்ச்சியான மூன்று ஆண்டுகளில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

மேற்படியார் தனது தகுதிகாண் பருவ காலத்திற்குள் 1.துறைத்தேர்வு, 2.தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறைத் தேர்வுகள் (ம) பவானிசாகரில் நடைபெறும் அடிப்படைப் பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப்பணிவரண்முறையானது, இப்பணி நியமனங்கள் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையிலுள்ள வழக்குகளின் முடிவுக்கு உட்பட்டதாகும் என அறிவிக்கப்படுகிறது.

செயலாளர்,
ஈரோடு விற்பனைக்குழு, 26/4/18
ஈரோடு.

**பெறுநர் (உரிய வழிமுறையாக)**

திரு.வே.பழனியப்பன், இளநிலை உதவியாளர்,
ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், நம்பியூர்.

**நகல்:**

விற்பனைக்கூடக் கண்காணிப்பாளர்,
ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், நம்பியூர்.

**நகல் சமர்ப்பணம்:**

1).ஆணையர்,
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்,
சென்னை - 32.
2).செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை - 600 003.